
# வர்மக்கலை



கா. காளிதாசன்

பிறெஞ்சு பயனீட்டாளர் சங்கத்தின் வெளியீடு

FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

# சித்தர்கள் உருவாக்கிய ஆரோக்கிய மருத்துவம்

சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவம் ஆகும். இது உண்மை-யான தவநெறி பிறழாது உன்னத நிலையில் வாழ்ந்து வந்த சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவின் பயனாக மிகத் துல்லியமாக உருவாக்கி-யுள்ள மருத்துவ முறையாகும். இம்மருத்துவ இயல் ஒவ்வொரு இடத் திலும் உள்ள தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப, பல்வேறு வகையான இயற்கைப் பொருட்களைக் கொண்டு பிணிகளை நீக்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல்பூண்டுகள், செடிகொடிகள், பட்டைகள், இலைகள், பூக்கள், பிஞ்சுகள், காய்கள், பழங்கள், வித்துகள், பிசின்கள், வேர்கள் ஆகியவற்றைக் கொண்டு தைலங்கள், கஷாயங்கள் போன்றவற் றைப் பல்வேறு நோய்களுக்கு ஏற்றவாறு தயாரிக்கும் ஓர் ஒப்பற்ற மருத்துவ முறையே சித்த மருத்துவம்.

''காலம் என்னும் கடும்பகை கடந்தபின் மருந்து மாத்திரைகள் எதற்கு?'' என்று அகத்தியர் எழுதினார். இந்தச் சூழ்நிலை உருவாகும் கட்டத்தில்தான் சித்தர்கள் மருந்து, செந்தூர பஸ்பங்கள், கஷாயங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தருவதை விட்டு-விட்டு வர்மத்தின் மீது தங்கள் கவனத்தைச் செலுத்தினர். அதாவது உடம்பைத் தொட்டுப் பார்த்தே சிகிச்சையளிக்கும் முறையை உருவாக்கினர். அதுதான் வர்மக் கலை.

இந்த வர்மக்கலைதான் சித்தர்களை மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர் களாக, அசாதரண சக்தி பெற்றவர்களாக ஆக்குகிறது. யோகநிலை, ஞானநிலை, கவநிலை ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்துச் செயல்பட்டவர்கள் சித்தர்கள். இந்த மூன்றும் இணைந்த நிலையில்தான் அவர்களால் வர்மங்களில் உள்ள உயிர்நிலை ஓட்டத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராய்ந்து அறிந்து எழுதத் தலைப்பட்டனர். ''அறிவை அறிவால் அறிந்து அனுபவித்து அந்த அறிவிலே மனவிரக்கம் கொண்டு'' அவர்கள் எழுதிய நூல்கள்தான் வர்மக்கலை சாத்திரங்களாக அமைந்தன.

'பொன்னூ சித் திறவு கோல்', 'இலாட நட்சத்திரம்', 'வர்ம தண்டுசி' என்ப முக்கியமான வர்மக்கலை நூல்களாகும். வெளிநாட்டார் இந்த நூல்களைத் தமது நாட்டுக்கு எடுத்துச் சென்று அங்கு அகுபஞ்சர், அகுபிரெஷர் போன்ற சிகிச்சை



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

முறைகளை வளர்த்தனர். ஆனால் நம் நாட்டிலோ வெள்ளையராட்சியின் காரணமாக இத்தகைய மருத்துவக் கலைகள் வளராமல் ஒடுக்கப்பட்டன. நேரடியான வெள்ளையராட்சி இல்லாத திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மட்டுமே இக்கலை பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. இது பற்றி பின்னர் விவரங்களை கூறுவோம்.

மருத்துவக் கலையில் மிக உயர்ந்த வடிவமாக வர்மக்கலை விளங்கியதால் அது பழங்காலத்தில் அரசர்கள், அமைச்சர்கள், பிரபுக்கள், தனவந்தர்கள் போன்ற மேட்டுக் குடிவாசிகளுக்குத்தான் பயன்பட்டு வந்தது. சித்தர்கள் வாழ்ந்த மலைகளையும் குகைகளையும் காடுகளையும் தேடி அரசர்கள் வந்ததுண்டு. அரண்மனைகளில் வர்மக் கலை மருத்துவர்களுக்கு அரச மரியாதை செலுத்தப்பட்டது. அரசமுத்திரை வழங்கப் பட்ட அவர்கள் அரண்மனையில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். 'அரசர்கள் அவர்களது குடும்பத்தினர் ஆகியோரின் உடல்நலம் பேணுவது மருத்துவரின் கடமையாக இருந்தது. வர்மக்கலை என்பது இரகசியமான சில குடும்பங்களுக்கு முன் மட்டும் வைத்து காப்பாற்றப்பட்டது. சிகிச்சை செய்பவர்களும்கூட சிகிச்சை பெறுபவர் களைப்போல மேட்டுக்குடிவாசிகளாகவே கருதப்பட்டனர். நமக்குத் தெரிந்தவரை எந்தவொரு மன்னனுக்கும் ஊனக்குழந்தை பிறந்ததாக வரலாறு இல்லை. மகப் பேறுக்கு முன்பும் பின்பும் தடுப்பு மருந்துகள் மூலமும் வர்மக்கலை மூலமும் தக்க உணவுப் பழக்கங்களைப் பின்பற்றச் செய்வதன் மூலமும் ஆரோக்கியமான குழந்தைகள் பிறப்பதற்கும் வளர்வதற்கும் உத்திரவாதம் செய்தனர் சித்த மருத்துவர்கள்.

*வர்மக்கலையின்றிச் சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள் முழுமை பெறாது. வர்மக்கலை என்பது சித்தர்களால் சித்த-ஆயுர்வேத முறைப்படி மனித உடலில் உள்ள உயிர்நிலை ஓட்டத்தைக் கணித்து உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ சாத்திரமாகும்.*

இக்கலை 96 தத்துவக் கோட்பாடுகளின்படி உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவுகிறது. மனித உடம்பில் உள்ள உயிர்நிலை ஓட்டங்கள் சந்திக்கும் பாகங்களில் எண்ணெய் தேய்த்துத் தடவிக் கொடுத்தும் நீவிவிட்டும், நரம்புகள், எலும்புகள், தமனிகள் ஆகியவற்றை அழுத்தி, சீரான ரத்த ஓட்டம் நடைபெறச் செய்வதன் மூலம் நோய்கள் குணப்படுத்தப்படுகின்றன. உடல் சமநிலைப்படுத்தப்பட்டு நரம்பு நாளங்கள் செம்மையாக செயல்பட வைக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பாகங்களின் மீது பச்சிலை மருந்துகளைப் பூசுதல், தடவுதல், ஒத்தடம் கொடுத்தல் பற்றுப்போடுதல் ஆகியவையும் கையாளப்படுகின்றன.

## அறிவை அறிவால் அறிந்து எழுதிய நூல்



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

உயிர்நிலை ஓட்டங்கள் உள்ள பகுதிகள் என்றால் என்ன? அவைதான் வர்மங்கள். அவை உடல் உறுப்புகளின் எல்லாவித இயக்கங்களுக்கும் அசைவுகளுக்கும் அடிப் படையாக உள்ளன. அவற்றின் சீரானபோக்கு உடல் நலத்திற்கும் சீரற்ற தாறுமாறான போக்கு நோய்களுக்கும் காரணமாக உள்ளன. இப்போது வர்மம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். மனித உடலில் உள்ள தசை, தமணி, நரம்பு, எலும்புசந்தி-கள் ஆகியவற்றின் சந்திப்பில் உயிர்நிலையின் (பிராணன்) இருப்பிடமாக உள்ள இடங்கள்தான் வர்மங்கள். மனித உடலில் 108 வர்ம இடங்கள் உள்ளன. வர்மங் களில் ஏற்படும் பாதிப்பினை அடிப்படையாகக் கொண்டு மொத்தமுள்ள 108 வர்மங்கள், 12 படுவர்மங்களாகவும் 96 கொடுவர்மங்களாகவும் பிரிக்கப்பட்டுள்-ளன. இந்த 108 வர்மங்களில் 8 வர்மங்கள் தட்டுவர்மங்கள் என அழைக்கப்படுகின்-றன. 108 வர்மங்கள் உள்ள இடங்கள்:

| | |
|---|---|
| கை, கால் | 44 |
| தலை | 23 |
| நெஞ்சு, முதுகு | 33 |
| மூலம் | 8 |
| மொத்தம் | 108 |

இந்த வர்மங்களுக்கெல்லாம் தலைவனாக உள்ளது தனஞ்சயன் வர்மம். இது தலை-யில் உள்ளது.


வர்ம சிகிச்சை என்பது பாதிக்கப்பட்ட உறுப்புகளிலுள்ள சம்பந்தப்பட்ட வர்மங் களை இயக்குவிப்பதுதான். செயலிழந்த அல்லது சக்தியற்ற உறுப்புகளிலுள்ள வாயு-களின் உயிர்நிலை ஓட்டத்தை இயக்குவதன் மூலம் உறுப்புகளைச் செம்மையாகச் செயல்படவைக்கலாம். வர்ம சிகிச்சையில், வர்மங்களை இயக்குவதுடன் உள்மருந்து-களும் அந்தந்த நோய்க்கு ஏற்பத் தரப்படுகின்றன. வர்மங்களின் பாதிப்பு என்பது வர்ம இடங்களில் ஏற்படும் அழுத்த அளவையும் அழுத்தத்தின் விதத்தையும் வர்ம சந்திகளில் பிராணனின் ஒடுக்கத்தின் நிலைமைகளையும் பொருத்து அமையும். விபத்து, தாக்குதல், முறைதவறிய வாழ்க்கை, சக்தி மீறிய செயல்பாடுகள் ஆகிய-வற்றால் வர்மம் பாதிக்கப்படலாம். பாதிப்பு ஏற்படும் இடத்திற்கு ஏற்ப மனிதனின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. வர்ம பாதிப்பு, சம்பந்தம் சம்பந்தமில்லாது உறுப்புகளைக் கூடப் பாதிக்கும்.

இப்போது வாயுக்களின் உயிர்நிலை ஓட்டம் என்றால் என்ன என்பதைக் காண்-போம். மனித உடலிற்கு ஆதாரமாக இருப்பவை வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் ஆகும். இந்த மூன்றையும் இயக்குவன தசவாயுக்கள் எனப்படும் பத்து வாயுக்களாகும். அவை கீழ்வருமாறு; பிராணன்; அபாணன்; உதாணன்; வியாணன்; சமாணன்; நாகன்; சடர்மன்; தனஞ்சயன்; கிரிகரன்; தேவதத்தன். இந்தப் பத்து வகையான வாயுகளின் சமநிலைதான் உடலின் எல்லா வகையான இயக்கங்களுக்கும் செயல்களுக்கும் அடிப்படையாகவும் மூலகாரணமாகவும் விளங்குகிறது. வாயுக்கள் சமநிலையில் இயங்க அவற்றின் இயல்பான இருப்பிடமும் போக்கும் இன்றியமை-யாதது. இதையொட்டித்தான் உடலில் வாயுக்களின் உயிர்நிலை ஓட்டம் அமைந் துள்ளது.



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

# கர்ப்ப காலத்தில் விகாரமடையும்



வாயுவை மின்சக்திக்கு ஒப்பிடலாம். கண்ணுக்குப் புலனாகாத மின்சக்தி கம்பிகள் மூலமாகப் பாய்ந்து செல்வதுபோல, வாயு மனித உடலில் உள்ள நரம்பு மண்டலத்தின் மூலமாகப் பாய்ந்து செல்கிறது. உடல் முழுவதும் அதன் ஓட்டம் நிகழ்கிறது. தசைகள், எலும்புகள் ஆகியவற்றை வாயு லென்றடைந்து அவற்றை முறைப்படி செயல்படுத்துகிறது. இந்தப் பத்து வாயுக்களில் கீழ்காணும் மூன்று வாயுக்கள் மிக முக்கியமானவை:

1. தனஞ்சயன் வாயு: கழுத்துக்கு மேலேயும் தலையிலும் உள்ள இந்த வாயு, நரம்பு மண்டலத்தையும் மூளையின் இயக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது.



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

2. பிராணன் வாயு: தொப்புளுக்கு மேல் தொடங்கி கழுத்துவரை உள்ள வாயு. இருதயம், நுரையீரல் ஆகியவற்றை இயக்கும் இந்த வாயு இன்றி பிற வாயுக்கள் எதுவும் உடலில் சுயேச்சையாக இயங்க முடியாது.

3. அபானன் வாயு: இது தொப்புளுக்குக் கீழே வயிற்றில் இயங்குகிறது. வயிற்றுப் பகுதியில் உள்ள உறுப்புகளை இயக்கவைக்கும். இவ்வாயு கீழ்நோக்கிச் செலுத்தப்படுகிறது. மலக்குடம் (குதம்), விரைகள், சினைப்பைகள், கருப்பை ஆகியவற்றிலிருந்து முறையே மலம், விந்து, முட்டை, குழந்தை ஆகியவற்றை வெளியேற்ற உதவுகிறது.

இந்த வாயுக்களில் சமானன் என்ற வாயு வாத நாடியாகவும், பிராணன் என்ற வாயு பித்த நாடியாகவும், தனஞ்சயன் என்ற வாயு கப நாடியாகவும் செயல்படுகின்றன. வாதம், பித்தம், கபம் ஆகியவற்றில் ஏற்படும் தோஷங்களே (குறைபாடுகளோ) எல்லா நோய்க்கும் அடிப்படையாக உள்ளன. இந்த மூன்றுக்கும் உள்ள சமநிலை குலைந்து ஒன்று மற்றொன்றோடு சேர்ந்து ஏற்படும் ஒன்பது விதமான சேர்க்கைகளே எல்லாவிதமான நோய்களுக்கும் மூலகாரணங்களாக அமைகின்றன.

உதாரணமாக வாத தோஷத்தினால் நரம்பு, எலும்பு, தசை நரம்பு போன்றவற்றின் பாதிப்பு ஏற்படும். பித்த தோஷத்தினால் மூளை பாதிக்கப்படும். தீராத தலைவலி, சளி, மூக்கில் நீர்வடிதல், முடி உதிர்ந்து போதல், இழுப்பு, வலிப்பு போன்றவை ஏற்படும். கப தோஷத்தினால் சிறுநீர்ப்பை, சிறுநீரகம், நுரையீரல், இருதயம் முதலியன பாதிக்கப்படும்.

தசநாடிகளின் (தசவாயுக்களின்) இயக்கத்தால் உயிர்நிலை ஓட்டம் உருவாக்கப்படுகிறது என்று கூறினோம். இந்தத் தச நாடிகளை இயக்குவது அமிர்த கலை என்பதாகும். அமிர்த கலைக்கு ஆறு ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆறு ஆதாரங்களையும் உணர்ந்தறிந்து மனித உடம்பில் உயிர் எங்குள்ளது என்பதை அறிந்து அதனை ஒரே இடத்தில் ஒடுங்க வைத்தனர் சித்தர்கள். ஒடுங்கிய உயிருக்கு 12 அடங்கல்கள் உள்ளன. இந்த அடங்கல்களை உயிரின் சுவாச ஸ்தானங்கள் என்று கூறலாம். இந்தப் பன்னிரெண்டு அடங்கல்களைக் கையாளுவதன் மூலம் அவசர சிகிச்சை கொடுக்கலாம். பழங்காலத்தில் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது போர்க் காலத்தில் அரசர்கள் முதலியோருடன் மருத்துவர்களும் இருப்பதுண்டு. காரணம் வர்மக்கலையைத் கொண்டு அவசர சிகிச்சை கொடுப்பதற்காகவே மருத்துவர்கள் அங்கிருந்தனர். இந்த அடங்கல்களைத் தொட்டு சிகிச்சையும் தரலாம்; ஊறு விளைவிக்கவும் செய்யலாம்.

சித்த மருத்துவர்கள் நாடிப்பிடித்துப் பார்த்து எந்த நாடி தோஷம் கண்டுள்ளது என்பதை அறிந்து, உடலின் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது, எத்தகைய சமநிலைக்குலைவால் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிகின்றனர்.

நாம் ஏற்கனவே கூறியதுபோல வர்மக்கலை சிகிச்சை என்பது பாதிக்கப்பட்ட உறுப்புகளைச் சீர்படுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட வர்மங்களை இயக்குவித்து அவற்றில் உயிர்நிலை ஓட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதாகும். பாதிக்கப்பட்ட உறுப்பின் எடை, தன்மை, காலம் ஆகியன கண்டுப்பிடிக்கப்படுகின்றன. இந்தக் கண்டு-



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

பிடிப்பின் அடிப்படையில் உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நோய் பற்றிய சரியான கணக்குக் கிடைக்காவிட்டால், தலைமை வர்மமான தனஞ்சயனிடம் மருத்துவர் கணக்குக் கேட்பார். அங்கிருந்து கிடைக்கும் விடையைக் கொண்டு சிகிச்சை தொடங்கப்படும். நோயாளியின் வயது, அவரது நோயின் கடுமை ஆகியவற்றுக்கு ஏற்றவாறு பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட வர்மங்கள் இயக்கவைக்கப் படுகின்றன. அத்துடன் உள் மருந்துகளும் தரப்படுகின்றன.

இப்போது நாம் வர்ம சிகிச்சையின் மூலம் வெற்றிகரமாகக் குணப்படுத்தப்படக் கூடிய சில நோய்கள் பற்றிக் கூறலாம்.

*(1)* பாலவாதம்: ஆங்கில மருத்துவ முறையில் 'போலியோ மைலைட்டிஸ்' (polio myelitis) என்று கூறப்படுவது சித்த ஆயுர்வேத மருத்துவ முறையில் 'பாலவாதம்' என்று சொல்லப்படும் எட்டுவகையான நோய்களைக் குறிக்கும். அவை கீழ்வருமாறு:

1. சுரவாதம்: காய்ச்சல் அடித்து 3லிருந்து 8 நாட்களுக்குப் பிறகு கை, கால்கள் தளர்ச்சியடைவது

2. அக்னிவாதம்: உடலில் எரிச்சல் ஏற்படும், வயிற்றிலுள்ள கிருமிகளால் வாந்தியும் காய்ச்சலும் ஏற்பட்டு வாயுவின் தாக்கத்தினுல் கைகால்கள் தளர்ச்சி-யடைவது.

3. மூலவாதம்: இடுப்பு சந்தியில் சக்தி இழப்பதால் உடம்பில் முறுக்கு ஏற்பட்டு கைகால்கள் பின்னிக்கொள்வது, கால்கள் செயலிழந்து போவது.

4. ஊக்கல் வாதம்: கைகால்கள் முறுக்கிக்கொள்வது.

5. அதிசாரவாதம்: சந்திகளில் சக்தியின்மை , மூளைபாதிப்பு, கைகால் தளர்ச்சி, வயிறு ஒட்டிப்போடுதல்

6. மேல்மூச்சுவாதம்: கைகால் குன்றி சந்திகள் தளர்ந்து சுவாசம் முட்டி இருத்தல்.

7. விரைவாதம்: ஒரு பக்க விரை மேலே தூக்கப்பட்டு, குடல் மேலே சுருண்டு எதிர்பக்கக் கால் சுருண்டுவிடுதல்: மலஜலம் கழிப்பது பற்றிய உணர்வு இல்லாமல் போதல்.

8. பொருத்துவாதம்: கழுத்து ஒருபக்கம் கோணி, சக்தி குன்றி, நிலை தளர்ந்து போதல்: கால் ஊனமுடியாது போதல்.

இப்போது பாலவாதத்தின் மூலகாரணம் என்ன என்பதை காண்போம். சிசு கருப்பையிலிருக்கும் பொழுதே தச வாயுக்கள் அதனதன் ஸ்தானத்தில் இருந்து கொண்டு கருவின் வளர்ச்சியில் பங்கேற்கின்றன. எனவேதான் சித்த ஆயுர்வேத மருத்துவமுறை, கர்ப்பிணிப்பெண்களிடத்தில் வாயுவை விகாரப்படுத்தாத ஆகார விகார முறைகளை வலியுருத்துகிறது.



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

வாயுக்கள் கர்ப்ப காலத்தில் விகாரமடைவதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவை கீழ்வருமாறு:

(1) வாயுவை விகாரப்படுத்தக்கூடிய உணவுவகைகளை உட்கொள்ளுதல் (உதாரணமாக உருளைக்கிழங்கு, முள்ளங்கி, தக்காளி, கருவாடு, ஐஸ்கிரீம், ஐஸ்-வாட்டர், உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத சில உணவு வகைகள்).

(2) வக்கிரமான நிலைகளில் உடலை வைத்துப்படுத்தல், செயல்படுதல், அமிர்தல்.

(3) காமம், குரோதம், மோகம், பயம் போன்ற மனோவிகாரங்கள்.

(4) சுக்கிர - ஆர்த்தவ சேர்க்கையில் உள்ள கோளாறுகள். அதாவது ஆண்-பெண் சேர்க்கையில் உள்ள கோளாறுகள் (உதாரணமாக பெண் ஈரத்தலையோடு இருக்கும் போதும், மலஜலம் கழியாமல் இருக்கும் போதும் சேர்தல்)





FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

சுக்கிர - ஆர்த்தவ சேர்க்கையில் (ஆண் - பெண் சேர்க்கையின்போது) தாயின் உடலில் உள்ள 108 வர்மங்களிலிருந்து வாயுக்கள் கருவில் சென்று இயங்குகின்றன. அவை கருவில் பத்து வாயுக்களாக ஒடுங்குகின்றன. எனவேதான் பத்துவாயுக்கள், பிறக்கும் குழந்தையின் உடலில் 108 வர்மங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

இந்த 108 வர்மங்களில் பத்து வாயுக்களின் சமநிலை சக்தியின் காரணமாகத்தான் கருப்பையில் கருவானது ஒரு நிலையாக நிறுத்தப்படுகிறது. அதனால்தான் தாயின் அசைவுகளும் அவளுக்கு ஏற்படும் அதிர்வுகளும் கருவைப் பாதிக்காமல் இருக்கிறது. மாறாக, தசவாயுக்கள் சமநிலை சக்தியை இழந்தால் வர்மங்கள் பாதிக்கப்படுகின்றன. பாதிக்கப்படும் வாயுக்களைப் பொறுத்து அதன் ஆதிக்கத்திலுள்ள உருப்புகளும் பாதிக்கப்படுகின்றன. குழந்தை பிறந்து சில காலங்களுக்குப் பிறகு அபானன், உதானன், தனஞ்சயன், ஆகிய வாயுக்கள் தாக்குதல் அடைந்து எட்டுவித பாலவாதத்தை தோற்றுவிக்கின்றன. இந்த எட்டுவித நோய்களுக்கு அந்ததந்த வாயுக்களுக்குரிய தனிப்பட்ட மருந்தையோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட வாயுக்களுக்குரிய கூட்டு மருந்துகளையோ பயன்படுத்தியும் கைகால்களில் உள்ள 44 வர்மங்களைச் சரியான படி ஊக்குவித்தும் குணப்படுத்தலாம். உலர்ந்து போன சிப்பி, தொய்ந்துபோன கால்கள், வலுவிழந்துபோன தசை ஆகியவற்றைச் சீராக்கலாம். இதற்கு ஒரு சில வர்மப்பச்சிலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

## 2. தோள்பட்டைவாதம் (spondylosis).

வர்ம சிகிச்சையின் மூலம் நல்ல முறையில் குணப்படுத்தக்கூடிய மற்றொரு நோய் தோள்பட்டைவாதம் ஆகும். இதைக் கழுத்துத்தண்டுவாதம் என்றும் கூறுவார்கள். ஆங்கில மருத்துவ முறையில் தோள்பட்டைவாதம், என்று அழைக்கப்படுகிறது. இது கழுத்தின் பின்புறத்திலிருந்து தோள்பட்டை வரையிலும் மேல் முதுகிலும் கை நெடுகவும் பாதிப்பை ஏற்படுத்தும் நோயாகும். இந்நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கு கழுத்து வலி, கழுத்துப்பகுதி அசைவின்மை, இறுக்கம் (Stiffness) தளர்ச்சி, குடைச்சல், தலைவலி, தலைச்சுற்றல், கைவலி, தரிப்பு (Irritating pain), மரத்துப்போதல் எனப் பல்வேறு கோளாறுகள் ஏற்படுகின்றன. இதனால் மனத்துயரம், மன அமைதியின்மை ஆகியனவும் ஏற்படலாம்.

இந்த நோய் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. உதாரணமாக, கழுத்து, தோள்பட்டை அருகில் அதிகமாக குளிர்ந்த காற்றுப்படுதல், தலையில் ஈரம் காயாமல் இருப்பது, தோள் கழுத்துப் பகுதிகளில் அடி உதைப்படுதல், உடலில் உள்ள வாதம், பித்தம், கபம் ஆகியவற்றின் பித்தம் அதிகமாகச் சுரந்து குடல் சூடேறி தலையில் நீர் கோர்த்து தலைநீர் இறங்குதல், அதிகநேரம் உட்கார்ந்து வேலைப்பார்த்தல், குளிர் சாதன அறையில் அதிகநேரம் வேலை பார்த்தல், போன்ற பல காரணங்களால் கழுத்து தோள்பட்டைப் பகுதிகளில் வாயு தாக்கப்பட்டு அங்குள்ள முக்கியமான வர்மங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த வர்மங்கள் பாதிக்கப்படுவதனால் தோள்பட்டை வாதம் உருவாகின்றது. கழுத்துப் பகுதிகளில் சூளைநீர் என்ற கபநீர் தங்கி வீக்கத்தை உண்டு பண்ணுகிறது. இதனால் காது கேளாதிருத்தல், மூக்கில் நீர் வடிதல், தொண்டை நீர் கட்டுதல் ஆகியன.



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

தோள்பட்டை வாதத்திற்கு ஆங்கில மருத்துவ முறையில் கழுத்துப்பட்டை (collar)- அணிவித்தல், அடிக்கடி (Traction) போடுதல் (அதாவது கழுத்தை இழுத்துப்பிடித்தல்) போன்ற சிகிச்சைகள் தரப்படுகின்றன. ஆனால் இதனால் முழுகுணம் கிடைப்பதில்லை.

இந்திய மருத்துவ முறையில் வர்ம சிகிச்சை மூலம் இந்த நோயைக்குறுகிய காலத்தில் எளிதாகக் குணப்படுத்தமுடியும். பாதிக்கப்பட்ட வர்மங்களைத் தைலங்களால் தடவியும் ஒத்தடங்கள் கொடுத்தும் மருந்துகளால் பற்றுப்போட்டும் வாயுவின் போக்கையும் நீர்நீரையும் சரிசெய்து நோயைக் குணப்படுத்தமுடியும். வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்களையும் சரிவர கணித்து அதற்கேற்றவாறு மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. வாதத்தை சமநிலைப்படுத்துவதற்காக காயத் திருமேனித் தைலம், வாதகுடோரித் தைலம், ஆலம்பாஸ் தைலம், பலாதரன் வந்தரம் தைலம், போன்ற சக்திவாய்ந்த தைலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை பல் வேறு மூலிகைகளிருந்து தயாரிக்கப்பட்டவை.

கழுத்து, தோள்பட்டைப் பகுதிகளில் இவற்றைத் தடவும்போது பாதிப்பு ஏற்பட்டுள்ள வர்மங்களை அறிந்து தடவுதல் அவசியம். உதாரணமாக தலைப் பகுதியிலுள்ள கொன்சிக்கா வர்மத்திலிருந்து சிப்பிவர்மம் வரை கீழ்நோக்கியும் சிப்பி வர்மத்திலிருந்து கொச்சிக்காய் வர்மம் வரை மேல்நோக்கியும் தடவுதல், சிப்பி வர்மத்திலிருந்து விலாப்பக்கம் தடவித் தாழ்தல், அறுகுபற்றி வர்மத்திலிருந்து மேல்நோக்கித் தடவுதல் என்ற அணுகுமுறையில் பின்பற்றவேண்டும். இதுதவிர, பிடரிவர்மம், குளிர்வர்மம், விலங்குவர்மம், சங்குதிரி வர்மம் ஆகியவற்றையும் இயக்குவிப்பது அவசியம்.

## பக்கவாதம் (paralysis).

பக்கவாதம் (paralysis) என்பது ஒரு பக்கத்துக் கைகால்களோ அல்லது இரண்டு கைகளும் இரண்டு கால்களுமே இயங்காமல் திடீரெனத் தளர்ந்து விடுவதாகும். உடலை இயக்கும் நரம்பு சந்திகள் சந்திக்கும் இடத்தில் தனஞ்சயன் வாயு குடிக்கொண்டிருக்கும். வாத பித்த அதிர்ச்சியால் தனஞ்சயன் வாயு நிலைமாறி தொய்ந்து விடுகிறது. அதனால் தலையின் உச்சியிலும் பின்பக்கமாகவும் உலாவிக்கொண்டிருக்கும் தனஞ்சயன் வாயு நிலை மாறுகிறது. இதன் காரணமாகக் கைகால்கள் இயக்க முடியாமல் போகிறது. (வாதபித்த அளர்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மலச்சிக்கலாகும்).


இடுப்பிலுள்ள அறுகுபற்றி வர்மத்தினால் இயங்கக்கூடிய நரம்புகள் தொய்ந்து குறுகிப்போவதால் கால்கள் கோணிப் போய்விடுகின்றன. வலதுகை தூக்க முடியாமல் போவதற்குக் காரணம் சிப்பி வர்மம் பாதிக்கப்பட்டு அதனால் இயக்க வைக்கப்படும் தசைகளும் நரம்புகளும் தொய்வுற்றுப்போவதுதான்.

சம்மந்தப்பட்ட வர்மங்களை இயக்குவதற்கு ஒத்தடம் கொடுத்தல், பூச்சுமருந்து தடவுதல், எண்ணெய்த் தைலங்களைத் தடவி நீவுதல் ஆகியன கையாளப்படுகின்றன. இவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட கைகால்களில் தேவையான இரத்த அழுத்தத்தையும்



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

காந்த சக்தியையும் உருவாக்கி, பக்கவாதத்தைப் போக்கிவிடலாம். தேவையான உள் மருந்துகளும் தரப்படுகின்றன.



## மூட்டுவாதம் (arthritis)

கைகால்களிலும் சந்து தசைகளிலும் ஓடக்கூடிய தசை வாயுவானது மூட்டிலேயே தங்கி நரம்பை உலரவைத்து சந்துதசையில் நீர் கோர்க்க வைப்பதனுல் கைகால் மூட்டு-வலி ஏற்படுகிறது. பித்த நீர் அளர்ச்சியாகி வாதநீருடன் கலந்து மூட்டுகளின் இயக்கத்திற்கு உதவக்கூடிய நீர்கோர்வைகள் உலர்ந்து விடுவதால் மூட்டுகள் இயங்க முடி-யாமல் இறுகிப் போய்விடுகின்றன. இதன் காரணமாக மணிபந்தவாதம் (rheumatid arthritis) ஏற்படுகிறது. கைகால்கள் மடக்கமுடியாதபடியோ வளைக்க முடியாதப் படியோ இறுகிப்போய்விடும், விரல்களைப் பிரிக்க முடியாது போகும். இந்த வாதம் வருவதற்கு முன் தலைவலி, தலைச்சுற்றல், வாந்தி ஆகியன ஏற்பட வாய்ப்புண்டு.



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

இறுகிப்போன, உலர்ந்து போன நரம்புகளைப் பூச்சுமருந்தும் தைலங்களும் தேய்த்து நெகிழவைத்து இரத்த ஓட்டம் சீரிய முறையில் நடைபெற முயற்சி செய்ய வேண்டும். இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட வர்மங்கள் இயக்குவிக்கப்படுவதுடன் தேவையான உள் மருந்துகளும் தரப்படுகின்றன.

முதுகுவலி:

தலையில் உள்ள நரம்பு மண்டலத்தில் கோர்க்கும் நீரானது வாதநரம்புகள் வழியாக இடுப்பில் உள்ள அறுகுபற்றி வர்மத்துக்கு இறங்கி அந்த வர்மத்தால் இயக்கப் படும் தசைகளிலும் நரம்புகளிலும் நரம்பு முடிச்சுகளிலும் நீர் கோர்க்கிறது. உடல் அசைவுகளாலும் நரம்பின் அதிர்ச்சிகளாலும் அந்த நீர் முதுகுத் தசைகளில் பரவுவதால் முதுகு வலி ஏற்படுகிறது. அதன்காரணமாக குனிந்தால் நிமிரவோ, நிமிர்ந்தால் குனியவோ முடியாமல் போகிறது. காலை இயல்பாக நீட்டி, மடக்கி, உட்கார முடியாது.

முதுகு வலியைப் போக்குவதற்கு பூச்சு மருந்துகள், எண்ணெய், தைலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அறுபற்றி வர்மம், மூலவர்மம், உந்திவர்மம், அத்திச்சுருக்கி வர்மம் ஆகியவற்றை அழுத்தி சரிவர இயக்குவிக்க வேண்டும். பொருத்தமான உள் மருந்துகளும் தரப்படவேண்டும்.





FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

## பிற நோய்கள்:

வர்மக் கலையின் மூலம் முறிவுகள், முகவாதம் (கோனல்) போன்ற நாள்பட்ட நோய்களையும் குணப்படுத்த முடியும். கர்ப்பிணிப்பெண்கள் அறுவை சிகிச்சைக்கு உள்ளாக வேண்டிய நிலையை, வர்ம சிகிச்சை கொண்டு தடுக்க முடியும். (உதாரண மாக சிசேரியன் என்று சொல்லப்படும் அறுவைப்பிரசவம்.) பிரசவ காலத்தில் குழந் தையை வெளிக்கொண்டுவரும் சக்தி அபான வாயுவிடம் உள்ளது.

சுகப்பிரசவம் என்பது இந்த வாயுவின் சரியான இயக்கத்தைப் பொறுத்துள்ளது. வர்ம சிகிச்சை முறையில் அபான வாயுவை சரிக்கட்டக்கூடிய வர்மங்களை சரிவர இயக்கி, அறுவை சிகிச்சையைத் தவிர்த்து, பெண்களுக்கு சுகப் பிரசவம் ஏற்படச் செய்ய முடியும். முழுமையான இடம் விட்டு நழுவிய (third degree prolopses) கருப்பை உடைய பெண்கள் அறுவை சிச்சைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்த நிலைமை-யிலும்கூட வர்ம சிகிச்சையைக் கையாண்டு கருப்பையை அதற்குரிய இடத்தில் கொண்டு வரமுடியும்.

இன்றைய நவீன சமுதாயத்தில் இருதய நோய் ஒரு மாபெரும் பிரச்னையாக வளர்ந் துள்ளது. ஆனால் அது தவிர்க்கப்படக்கூடிய நோய்தான். இதற்கான மிகச்சிறந்த மருந்துகள் சித்த ஆயுர்வேத மருத்துவத்தில் உள்ளன. மேலும், அவசர சிகிச்சை - (emergency cases) பெற வேண்டிய நிலையில் உள்ளவர்களுக்கும்கூட இருதயம் சம்பந் தப்பட்ட வர்மங்களைக் கையாழுவதன் மூலம் உடனடி நிவாரணம் பெற முடியும். வர்மங்களின் உயிர்நிலை ஓட்டம் தவறி இரத்த நாளங்கள் அடைப்பட்டு நெஞ்சுவலி, மாரடைப்பு போன்ற நோய்கள் ஏற்படும்.

(Bypass Surgery) என்ற அறுவை சிகிச்சை செய்யப்படவேண்டிய நிலையுலுள்ள நோயாளிக்கும் வர்ம சிகிச்சை மூலம் குணமளிக்க இரத்தநாளங்களை சரிவர இயக்கு-வித்து அவரது இருதயத்தை சீராக்க முடியும்.

முதுகெலும்புக்கோணல் (scoliosis) போன்ற விகாரங்களுக்கு அறுவை சிகிச்சை செய்தபோதிலும் நவீன முறைப்படி அவற்றிற்கு முடிவுகாண இயலாது. வாதகுடோரி, ஆலம்பால், காயத்திருமேனி போன்ற தைலங்களைப் பயன்படுத்தி, முதுகெலும்புத் தண்டை சில கோணங்களில் வைத்து சம்பந்தப்பட்ட வர்மங்களை இயக்குவித்து, மேற் குறிப்பிட்ட விகாரங்களைச் சரிசெய்ய முடியும். தளர்வாத நோய்கள், மலஜலம் கட்டுப்பாடின்மை, பல்வேறு வகையான வயிற்றுவலிகள், எலும்புமுறிவு, கைகால் மூட்டு விலகுதல் போன்றவற்றிற்கும் இம்முறைப்படி மிகச்சிறப்பான சிகிச்சை தரமுடியும். எவ்வளவு கடுமையானதாக எலும்பு முறிவு இருந்தாலும், வர்மங்களை இயக்குவித்து எழும்புகளைச் சரிவரக்கட்டி முறிவைக் குணப்படுத்த இயலும். முறிந்த எலும்புகளுக்கு வர்ம முறையில் சிகிச்சை தருவதோடு மேற்படி தைலங்களைத் தேய்த்து நரம்புகளைச் சரி செய்வதால் உள்காயங்களும் ஆற்றப்படுகின்றன. இவ்வாறு அந்த உறுப்புகள் முன்போலவே இயல்பாக இயங்குவதோடு தசைத்தொய்வுகளும் விகாரங் களும் இல்லாமல் முழுமையாகக்குணமடையும்.

வர்ம சிகிச்சை முறை என்பது சிலம்பாட்டம், களரி, யோகம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. சிலம்பாட்டமும் களரியும் போர்க்கலைகளாகும். உடலிலுள்ள குறிப்பிட்ட வர்ம ஸ்தானங்களைக் குறிவைத்துத் தாக்குவதன் மூலம் எதிரியைச்செய-



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011

விழக்க வைக்கவும் தேவைப்பட்டால் அவனை ஒழித்துக்கட்டவும் பயன்படும். இப் போர்கலைகள் பெரும்பாலும் தற்காப்புக்காகவே சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தன.

உடலிலுள்ள வர்ம ஸ்தானங்களைப் பற்றிய அறிவு நல்லதற்குப் பயன்படலாம், கெட்டதற்கும் பயன்படலாம். எனவே வர்ம சிகிச்சை முறை நமது முன்னோர்களால் மிகவும் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததற்கு இதுவும் ஒரு காரணமே. பரம்பரை பரம்பரையாக இந்த மருத்துவக்கலையில் தேர்ச்சிபெற்று அதைப்பயன்படுத்தி வந்த சில குடும்பங்களே அதைப்பாதுகாத்து வந்துள்ளன. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இருந்த காலக்கட்டத்தில் இந்திய மருத்துவத்திற்குப்போதிய ஆக்கமும் ஊக்கமும் தரப் படவில்லை. அதன்காரணமாக அதன் முக்கியத்துவம் குறைந்தது. ஆயினும் திருவி-தாங்கூர் மகாராஜா ஆட்சியில் கீழிருந்த கேரள சமஸ்தானத்தில் வர்மக்கலை வளர்க்கப்பட்டு வந்தது. அந்த சமஸ்தானத்தில் இன்றைய தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டமும் இணைக்கப்பட்டிருந்ததால் அங்கும் இக்கலை சிறப்பாக வளர்ந்து வந்தது.

திருவிதாங்கூர் அரண்மனையில் ஆஸ்தான வர்மாணி (வர்மக்கலை) மருத்துவர்களாகப் பணியாற்றி வந்தவர்களின் பரம்பரையில் பிறந்த டாக்டர் வே. தருமலிங்கம் வர்மக்கலைக்கு புத்துயிருட்டுவதிலும் அதனை பிரபல்யமாக்குவதிலும் பெரும் பங்காற்றி வருகிறார். திருவிதாங்கூர் மகாராஜாவின் அரக்கட்டளையின் கீழ் இயங்கிவரும் வர்மாக் கல்லூரியில் முறைப்படி தேர்ச்சிப்பெற்று பட்டதாரியாகியுள்ள அவர் தம் இளம் வயதில் இருந்தே தந்தையாரிடமிருந்தும் பாட்டனாரிடமிருந்தும் வர்மக்கலை நுட்பங்களை ஆழ்ந்து கற்று வந்தார்.

அவரது மூதாதையர்களிடமிருந்து தனக்கு பாரம்பரியமாக வந்து சேர்ந்த அரிய நூல்கள், ஏட்டுச்சுவடிகள் ஆகியவற்றிலுள்ள விவரங்களைப் பெயர்த்து எழுதுவதிலும் அவற்றிலுள்ள மருத்துவ நுட்பங்களை ஆராய்ந்து புதிய சிகிச்சை முறைகளை உரு-வாக்குவதிலும் ஈடுபட்டுள்ளார். 50க்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் வர்மக்கலை பற்றிய விளக்கவுரைகள் ஆற்றியுள்ளார். வர்மக்கலை ஒரு சில குடும்பங்களுக்குள் மட்டும் இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதை விரும்பாத அவர், சில மருத்துவர்களை வர்மக்கலையில் பயிற்றுவித்து வருகிறார். அதே போல் வர்ம ஸ்தானங்களை இயக்குவிப்பதற்காக உடலின் பல பாகங்களில் எண்ணெய் தடவி நீவிவிடும் பணியினைச் (மசாஜ்) செய்யக் கூடியவர்களுக்கும் பயிற்சியளித்து வருகிறார். இப்படிப் பயிற்சி பெற்றவர்களில் பெண்களும் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மூலிகைப் பண்ணையையும் நிறுவி உள்ளார். வர்மக்கலை அமிழ்ந்து விடாமல் பாதுகாக்கும் பொருட்டு பாரம்பரிய வர்மா மருத்துவர்கள், எலும்பு பொருத்து வல்லுநர்கள் ஆகியோரை ஒன்று படுத்தி அரசாங்கப் பதிவதிகாரம் பெற்ற சங்கமொன்றையும் உருவாக்கியுள்ளார். சென்னை நகரில் கடந்த இரண்டாண்டு-களாக மருத்துவமனை ஒன்றை நடத்தி வருகிறார். அவரது மருத்துவத் திறமைக் குறித்து 'இந்து' (The Hindu) நாளேடு உள்ளிட்ட பல பத்திரிகைகள் பேட்டிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் பாரம்பரிய மருத்துவக்கலைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தி நூல்களை வெளியிடும் நிறுவனமொன்று வர்மக்கலை பற்றி அவரும்வேறு இருவரும் சேர்ந்து எழுதிய ஆங்கில நூலொன்றை வெளியிட்டுள்ளது. இந்திய மருத்துவ இயல் கல்லூரி-களில் வர்மக்கலையைப் போதிக்கும் பொருட்டுப் பாட நூல்களை எழுதுவது அவரது



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011




http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

முக்கிய குறிக்கோளாகும். டாக்டர் வே. தர்மலிங்கத்தின் திறமையை அங்கீகரித்துள்ள தமிழ்நாடு அரசாங்கம் அவரை சென்னையிலுள்ள அண்ணா மருத்துவமனையில் கௌரவ வர்மக்கலை மற்றும் பாரம்பரிய எலும்பு பொருத்து வல்லுநராக நியமித்துள்ளது. வர்மக்கலை சிகிச்சை பெற விரும்புவர்கள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

DR. V. DARMALINGAM. DCM (Siddha)
Dharma Clinic
31, 3rd Cross Street,
Ellaiamman Colony,
Teynampet,
Madras 600 086. (Phone: 455901)



FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011




FREE E BOOKS - www.thamizham.net - TM2371 / March 2011